Registered as a Newspaper in Sri Lanka

விலை ரூபா ஒன்று

தமிழ்முரசு

முரசு 2 19 7-1985 வெள்ளிக்கிழமை (ஆடி 4 ஷவ்வால் 30) முழக்கம் 163

கூட்டணியின் முடிவுகளுக்கு 'பொலிட்பீரோ' அங்கீகாரம்

(சென்னை)

பூட்டான் தலைநகர் திம்புவில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளில் தமிழர் விடுதலைக் கூட்டணிக் குழுவின் பரிந்துரை முறைக்கு அதன் பொலிட்பீரோ' அங்கீகாரமளித்துள்ளது. சென்னையில் கூடிய பொலிட்பீரோ' ஒன்ய தமிழ்ப் பிரிவுகளுடனும் கலந்தாலோசனை செய்து அடுத்த நடவடிக்கை குறித்துத் தீர்மானிப்பது என்றும் முடிவு செய்தது. திம்பு மாநாட்டுப் பேச்சுவார்த்தைகளின் சாரம்சத்தை குழுவினர் 'பொலிட்பீரோ' முன் சமர்ப்பித்தனர்.

பூட்டான் மாநாடு பற்றி விளக்கிக் கூற

நீலன் கிழக்குக்கும் சூசை வடக்குக்கும் விஜயம் செய்வர்!

சென்னையில் 4 மணி நேரம் அந்தரங்க பேச்சு

(சென்னையிலிருந்து கிடைத்த செய்தி)

பூட்டானில் நடைபெற்ற இனப்பிரச்சினை தொடர்பான சந்திப்பு மாநாட்டின் முக்கிய விபரங்கள் பற்றி கூட்டணித் தலைவர்கள் அமிர்தலிங்கம், சிவசிதம்பரம், இரா. சம்பந்தன் ஆகியோர் கொழும்பிலிருந்து சென்ற கலாநிதி நீலன் திருச்செல்வம், பி. எஸ். சூசைதாசன் ஆகியோருடன் நேற்றுக்காலை சுமார் நான்கு மணித்தியாலங்கள் அந்தரங்கமாக கலந்துரையாடியதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கூட்டணித் தலைவர்களின் அவசர தொலைபேசி அழைப்பைத் தொடர்ந்து, கலாநிதி நீலன் திருச்செல்வம் நேற்று முன்தினம் அவசரமாக சென்னைக்குச் சென்றார்.

பூட்டான் மாநாடு ஆரம்பமாவதற்கு இரு தினங்களுக்கு முன்னர் திரு. பி. எஸ். சூசைதாசன் சென்னைக்கு அழைக்கப்பட்டிருந்தார்.

தமிழ் தீவிரவாத இளைஞர் இயக்கங்களுடன் ஒற்றுமையாக தொடர்ந்தும் இயங்குவது உறுதிப்படுத்தும், ஆகஸ்ட் பதினைந்தாம் திகதி மீண்டும் பூட்டானில் ஆரம்பமாகும் சந்திப்பின்போது நடந்து கொள்ளவேண்டியவிதம் பற்றியும் நேற்றைய சந்திப்பில் நுணுக்கமாக ஆராயப்பட்டது.

முக்கியமாக, நேற்று முன்தினம் அமைச்சரவைக் கூட்டத்தில் சுயாட்சி பற்றியும், தமிழ்க் குழுக்களின் வரையறுக்கப்பட்ட கடமை பற்றியும்

—6ஆம் பக்கம் பார்க்க

"விடுதலைப் புலிகள்" விடுத்துள்ள அறிக்கை:

பாவற்குளம் காடுகளில தமிழர்கள் ஒளிந்து வாழும் நிலை ஏற்பட்டுள்ளது

(சென்னை)

மிகப் பெரும்பான்மையின ராகத் தமிழ் பேசுவோர் வாழும் பகுதிகளின்றும் தமிழர்களை அப்புறப்படுத்திவிட்டு, அத் தமிழ்ப் பிரதேசங்களில் சிங்களவர்களை குடியமர்த்தவதில் இலங்கை அரசாங்கம் தீவிரமாக ஈடுபட்டு வருகிறது என தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் குற்றம் சாட்டியுள்ளது.

மட்டக்களப்பிலும், பிற பிராந்தியங்களிலும் இராணுவம் தனது ரோந்து எனப்படும் சுற்றுக்காவல் நடவடிக்கைகளை உக்கிரமாக்கியுள்ளது: 1985, ஜூலை மாதம் பதினெராம் திகதியன்று சீருடைக் குழுவொன்று ஒரு பஸ் உண்டியை நிறுத்தி, உள்ளே இருந்த இரண்டு தமிழ் வாலிபப் பிரயாணிகளை வெளியே இழுத்தெடுத்து, அவர்களைச் சித்திரவதை செய்தபின் கைதாக்கிச் சென்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜூலை பதினைந்தாம் திகதி வரையுள்ள மூன்று நாட்களுள் காணாமலடையும் சிருடையினரும், வவுனியா மாவட்டத்தினுள் உள்ள பாவற்குளத்தில் தமிழர்களுடைய பல கடைகளையும் வீடுகளையும் கொள்ளையடித்தனர்; ஓர் இளம் பெண்ணையும் கற்பழித்தனர். அட்டூழியம் தாங்காது பெரும் தொகையான அவ்விடத்துத்

—6-ஆம் பக்கம் பார்க்க

இலங்கை தமிழாசிரியர் சங்கம்

பதில் அதிபர்களை நிரந்தர அதிபர்களாக்க முயற்சி!

1980 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 30ஆந் திகதி பதில் அதிபர்களாக இருந்து இன்றுவரை தங்களுக்கு உரிய அதிபர் பதவியில் உறுதிப்படுத்தப்படாத தமிழ் அதிபர்களை 1982ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல்

—6ம் பக்கம் பார்க்க

கேரதீவு சங்குப்பிட்டி வீதி அமைப்பு விரைவில் முடியும்

(சாவகச்சேரி)

மகாதேவா தரம்போதியில் கடலுக்குக்குறுக்காக சங்குப்பிட்டியிலிருந்து கேரதீவு வரை வீதி அமைக்கும் வேலைகள் அதன் எல்லைக்கற்களை அடைந்துள்ளன. கடல் நிரப்பி வீதி அமைக்கும் வேலைகள் துரிதமாக நடைபெற்று வருவதால் இன்னும் சில தினங்களில் பூர்த்தியாகிவிடும் என எதிர்

—6-ஆம் பக்கம் பார்க்க

பிரதமரும் முதல்வரும்

பிரதமர் ராஜீவ் காந்தி கடந்த திங்கட்கிழமை தமிழகத்துக்கு விஜயம் செய்தபோது, முதலமைச்சர் எம். ஜி. இராமச்சந்திரன் சென்னை விமான நிலையத்துக்குச் சென்று அவரை வரவேற்றார். திருமதி. ஜானகி இராமச்சந்திரன் அருகில் காணப்படுகின்றார்.

28 உப அலுவலகங்களுக்கும் மின்சார சபை எச்சரிக்கை

யாழ்ப்பாண மாவட்டம் இருளில் மூழ்கும் அபாயம்!

யாழ்ப்பாண மாவட்ட அபிவிருத்திச் சபையின் இருபதெட்டு உப அலுவலகங்களுக்கும் மின்சாரப் பாக்கியை உடனடியாகச் செலுத்துமாறு இலங்கை மின்சார சபை இறுதி எச்சரிக்கைக் கடிதத்தை அனுப்பியுள்ளது.

இதனை உடனடியாகச் செலுத்தாவிடின், மறு அறிவித்தலின்றி மின்சார சப்ளை துண்டிக்கப்படுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட அபிவிருத்திச் சபையின் 53 உப அலுவலகங்களில் மட்டுமே மின்சார சபையிடம் மின்சாரத்தைப் பெற்று விநியோகித்து வருகின்றன. எனை 23 உப நிலையங்களுமே மின்சாரக் கட்டணப் பாக்கி செலுத்த வேண்டிய நிலையிலுள்ளன.

இத்தப் பாக்கி பலகோடி ரூபாவரை இருக்கலாமென மதிப்பிடப்பட்டுள்ளதாக அரசாங்க செயலக அதிகாரி யொருவர் தெரிவித்தார். உடனடியாக இதனைச் செலுத்தும் நிலையில் உப அலுவலகங்கள் இல்லை எனவும் அவர் தெரிவித்தார்.

—6-ஆம் பக்கம் பார்க்க

யாழ். தியேனைக்கும் படைக்கு நல்லூரில் நிரந்தர கட்டடம்

யாழ்ப்பாண மாநகர சபையின் தியேனைக்கும் படைப் பிரிவுக்கென தனியான ஒரு கட்டடம் அமைக்கும் வேலை நல்லூரில் ஆரம்பமாகியுள்ளது.

நல்லூர் கோவிலுக்கும் முத்திரைச் சந்தை சந்திக்கும் இடையில் பருத்தித்துறை வீதியிலுள்ள காணியில் முக்கட்டடம் அமைக்கப்பட்டு வருகின்றது. இதற்கென மூன்று லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

கனடிய அரசாங்க அன்பளிப்பாக இங்கு வந்து சேர்ந்த தியேனைக்கும் இயந்திரம் நிறுத்துவதற்கு இடமில்லாததால், தற்போது நல்லூர் இந்து வித்தியாசாலைக் கட்டடத்தில் நிறுத்தப்பட்டுள்ளது.

—6-ஆம் பக்கம் பார்க்க

வேலைவாய்ப்பு பணியகம்

வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் அடுத்த செப்டம்பர் மாதம் முதல் இயங்கும் என தொழில் அமைச்சர் பி. சி. இமுபுலான தேற்று தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்துக்கு சகலரும் ஒத்துழைப்பு வழங்கும்படி கேட்ட

—6ஆம் பக்கம் பார்க்க

திருப்பி ஒப்படைக்குமாறு அரச அதிபர் வேண்டுகோள்:

நெதர்லாந்து தூதரக அதிகாரி வாகனம் முல்லைத்தீவில் வைத்துக் கடத்தப்பட்டது!

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு கிராமிய ஒன்றிணைப்பு அபிவிருத்தித் திட்டம் சம்பந்தமான வேலைகளை மேற்கொள்ளவென முல்லைத்தீவிற்கு விஜயம் மேற்கொண்டிருந்த நெதர்லாந்து தூதரக உயர் அதிகாரி திரு. கரல் பிரான்ட்சென் உத்தியோக பூர்வ வாகனம் அரசாங்க அதிபரது விடுதியில் வைத்து இனந் தெரியாத இருவரினால் கடத்திச் செல்லப்பட்டதாக அறிவிக்கப் பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இரவு ஏழு மணியளவில் அரசாங்க அதிபர் திரு. ஜெகா செந்தில் நாதனை, மேலதிக அரசாங்க அதிபர் திரு. கே. பொன்னம்பலம் மற்றும் திட்டமிடல் அமைச்சு அதிகாரி ஆகியோருடன் நெதர்லாந்து அதிகாரி உரையாடிக் கொண்டிருக்கையில் இருவர் கைக் குண்டுகளுடன் அங்கு வந்து 98 சிறி 5102 இலக்கமுடைய 'நிசான் பிக்

—6ஆம் பக்கம் பார்க்க

துயர்துடைப்பு சங்கம்

(மன்னார்)

மன்னார் பொதுமக்களுக்குச் சேவையாற்றுவதற்கெனபுதிய சங்கம் ஒன்று நாளை சனிக்

—6ஆம் பக்கம் பார்க்க

யாழ்நகர அபிவிருத்திக்கு யுனிசெப் அளிக்கும் உதவி

யூனிசெப் திட்டம் மக்கள் ஒருங்கிணைப்புத் திட்டமாகும். இதன் மூலம் நன்மை பெறும் யாழ். மாநகர எல்லைக்குள் வசிக்கும் மக்கள் இச்சேவையில் தம்மை இணைத்துக் கொள்ள வேண்டும். இதன் மூலம் நன்மை பெறும் மக்கள் இச்சேவைகள் மூலம் ஒருங்கிணைக்கப்பட வேண்டும். யூனிசெப் திட்டம் என்பது குழந்தைகள் அவசர நிதியுதவித் திட்டமாகும். இந்த நிதியுதவியின் மூலம் குழந்தைகள்—தாய்மார்கள் சுகாதாரமும்—போஷாக்கும் பேணிப்பாதுகாக்கப்பட வேண்டும்.

இவ்வாறு யாழ். மாநகராட்சி மன்ற விசேட ஆணையாளர் திரு. சி. வி. கே. சிவஞானம் நல்லூர் இந்துவிடுதி குழுக்கூட்ட அறையில் நடைபெற்ற யூனிசெப் திட்ட அமுலாக்கல் சம்பந்தமான கலந்துரையாடலில் கூறினார்.

யூனிசெப் திட்ட அமுலாக்கல் சமூக இணைப்புக்குழுப் பிரதிநிதிகளும் யாழ். மாநகராட்சி மன்ற இலாகாத்தலைவர்களும் அடங்கிய கூட்டத்தில் ஆணையாளர் தொடர்ந்து பேசுகையில் குறிப்பிட்டதாவது:

யாழ் மாநகர எல்லைக்குள் வசிக்கும் தாய்மார் - குழந்தைகள் சுகாதாரம் பற்றிய போதிய விபரங்கள் இன்னும் சேகரித்து முடிக்கப்படவில்லை. இவ்விடயத்தில் எமக்கு உதவ யாழ். பல்கலைக்கழக சமூக வைத்திய பீடத்தின் உதவி பெற அனுமதி பெறப்பட்டுள்ளது. இவ்வேலைக்கு ஒருலட்சத்து 28 ஆயிரம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இவர்களின் உதவிமூலம் பெண்கள் - குழந்தைகள் ஆகியோரின் சுகாதாரம் - போஷாக்கு என்பன சம்பந்தமான விபரங்கள் திரட்டப்பட்டு பூரணப்படுத்தப்படும்.

மகப்பேற்று நிலையம்

யாழ்ப்பாண மாநகர சபை எல்லைக்குள் வசிக்கும் மக்களின் தேவைக்கு ஏற்ப மகப்பேற்று நிலையங்கள் தற்பொழுது சேவையிலிருப்பன போதாமல் இருக்கின்றன. மகப்பேற்று நிலையங்கள் அமைக்கவும், அவற்றைத் திறம்பட நடத்தவும் ஒருலட்சத்து ஐம்பதினாயிரம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த ஒரு மகப்பேற்று நிலையம் அரியாலையில் திறந்து வைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

நல்லூர் - வண்ணார்பண்ணை ஆகிய இடங்களில் இரண்டு மகப் பேற்று நிலையங்களை நிறுவ நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது.

வைத்திய பரிசோதனை

சுகதேகியாக நாம் இருப்பதால் வைத்திய பரிசோதனை குறித்து நாம் கவனம் செலுத்துவதில்லை. மாநகர எல்லைக்குள் இருக்கும் குழந்தைகளில் 60 வீதமானோர் தடுப்பூசிகள் ஏற்றப்பட்டவர்கள். மிகுதி 40 வீதமானோர் தடுப்பூசிகள் ஏற்றாமல் இருக்கிறார்கள் தடுப்பூசி குழந்தைகளுக்கு மிக அவசியமாகும். குழந்தைகளின் சரீரத்தில் எதிர்ப்புச்சக்தி குறைய நோய்கள் ஏற்படக்கூடிய சாத்தியங்கள் தோன்றலாம். யூனிசெப் திட்டத்தின் படி 100 வீதமானோருக்கும் தடுப்பூசி போட்டுக் கொள்ள வேண்டும். தடுப்பூசிகளைப் போட்டுக்கொள்ள குழந்தைகளையும், தாய்மார்களையும் ஊக்குவிக்க வேண்டிய பொறுப்பு சமூக அபிவிருத்திக் கழகப் பிரதிநிதிகளுடையதாகும். நாவாந்துறைப் பகுதியில் வாழும் மக்கள் தடுப்பூசிகளைப் போட்டுக் கொள்ளுவதில் அதிக கவனம் செலுத்துகிறார்களில்லை. இதனை நிவிர்த்தி செய்ய நாவாந்துறைப் பகுதி அபிவிருத்திக் கழகத்தொண்டர்கள் உழைக்க வேண்டும்.

வயிற்றோட்டமும் மிகவும் பயங்கரமான நோயாகும். குழந்தைகளின் வளர்ச்சியை காலத்துக் காலம் மதிப்பீடு செய்வதற்கான அட்டைகள் தற்பொழுது தயார் செய்யப்படுகிறன இவைகளையும் பூரணமாக நாம் தயார் செய்து கொள்ளச் சுகாதாரத் தொண்டர்களின் உதவி தேவைப்படுகிறது.

பொது மலசல கூடம்

யாழ்ப்பாண மாநகர எல்லைக்குள் சுமார் இரண்டாயியிரம் வாளிமல கூடங்கள் இருக்கின்றன. இவற்றை நீரடைப்பு மலகூடங்களாக மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது. சன நெருக்கம் அதிகமாக இருக்கும் திட்டி, குருநகர், கொட்டடி போன்ற பகுதிகளில் இருக்கும் வாளிமல கூடங்களை பொதுக்குளி அமைத்து அதனுடன் இணைத்துக் கொள்ளுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

திட்டிப்பகுதியில் இத்திட்டத்தின் கீழ் பல மலகூடங்கள் ஒருங்கிணைக்கப்பட்டு ஒரு பொதுக்குளியுடன் சேர்க்கப்பட்டுள்ளன ஏனைய பகுதிகளிலும் இத்திட்டத்தினைச் செயல்படுத்த சமாதாரப்பிரிவினர் முயற்சி செய்து வருகிறார்கள்.

குடிநீர்த் திட்டம்

நன்னீர்த்திட்டத்தின் கீழ் குடிநீர் வழங்குவதற்காக அரியாலை கிழக்கு, அரியாலை மேற்கு, பொம்மை வெளி, நல்லூர் ஆகிய பகுதிகளில் குழாய்க்கிணறுகள் அமைக்கும் வேலைகள் முடிவடைந்துவிட்டது. தண்ணீர் தாங்கி அமைக்கும் வேலைகளுக்கு ரெண்டர்கள் கோரப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன. தண்ணீர் தாங்கிகள் அமைக்கும் வேலைகளை பெரும்பாலும் மூன்று மாதங்களுக்குள் முடிக்க நடவடிக்கை எடுக்கப்படும். ஐப்பசி மாதம் முடிவடைவதற்குள் குழாய் மூலம் இப்பகுதி மக்கள் குடிநீரைப் பெறுவர். இவைகளை விட கச்சேரி—நல்லூர் வீதியிலிருக்கும் மூர்த்தவிநாயகர் ஆலயப் பகுதியிலும், நாயன்மார்கட்டுப் பகுதியிலும், இரண்டு கிணறுகள் தோண்டி நீர் வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

பாலர் பாடசாலை

கண்ணாபுரம், திட்டி ஆகிய பகுதிகளில் தற்பொழுது இயங்கி வரும் பாலர் பாடசாலைகளுக்கு யூனிசெப் திட்டத்தின் கீழ் தளபாடங்களும், ஏனைய சில வசதிகளும் செய்து கொடுக்கப்படவிருக்கின்றன.

நாடமாடும் நூல் நிலையம்

யாழ். மாநகராட்சி மன்ற எல்லைக்குள் தற்பொழுது இயங்கும் பாலர் பாடசாலைகளை நடமாடும் நூல்நிலையத் திட்டத்துடன் இணைத்து இவைகளுக்கு நூல்கள் வழங்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

தையல் பயிற்சி நிலையம்

பொம்மை வெளிப் பகுதியிலும், நாவாந்துறைப் பகுதியிலும் வாழும் பெண்கள் சிறு தொழிலைச் செய்து சிறிய வருமானம் பெறக்கூடிய வகையில் மூன்று மூன்று தையல் இயந்திரங்கள் வழங்கப்படவிருக்கின்றன. இவர்களுக்குச் சிறிது காலம் பயிற்சியும் அளிக்க ஏற்பாடுகள் செய்யப்படும்.

பொதுக் கிணறு

பொதுமக்களின் பாவனைக்காக சூரிய வெளிப்பகுதியில் ஒரு பொதுக்கிணறு வெட்ட நடவடிக்கை எடுக்கப்படும். என்று குறிப்பிட்ட ஆணையாளர், இத்திட்டங்கள் பூரண வெற்றி பெற யூனிசெப் திட்ட அமுலாக்கல் சமூக இணைப்புக் குழுக்கள் பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டு மென்று கேட்டுக் கொண்டார்.

தொகுப்பு:
நல்லூர் நிருபர்

ஸ்ரீ துர்க்கை அம்பாள் தேவஸ்தானம்

சாவகச்சேரி

அன்புடையீர்!

இவ்வாலயத்தில் தற்பொழுது நடைபெற்றுவரும் "இலட்சார்ச்சனை" 20-7-85 சனிக்கிழமை மாலை பூஜையுடன் பூர்த்தி அடையும். 21-7-85 ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியளவில் துர்க்கை அம்பாளுக்கு அஷ்டோத்தரசத (108) சங்காபிஷேகமும், பிற்பகல் 2-30 மணியளவில் விசேட பூஜையும், சுமங்கலி பூஜையும் (தீபலட்சுமி பூஜை) நடைபெறும். சிறப்பு விருந்தினராகத் தெல்லிப்பளை ஸ்ரீ துர்க்கை அம்மன் தேவஸ்தான பரிபாலன சபைத் தலைவி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் "ஆடிப்பூரமும் அம்பிகை வழிபாடும்" என்பது பற்றி அருளுரை வழங்குவார்கள். அனைவரும் வருகை தந்து அன்னையின் அருள்பெறுக.

இங்ஙனம்

பிரம்மஸ்ரீ ப. மகாகணபதி சர்மா
ஆதீன கர்த்தா.

முழந்த நாள் வாழ்த்து

✻ வண்ணார்பண்ணை விஜேந்திரா அகிலாண்டேஸ்வரி தம்பதிகளின் மகன் ஜெனார்த்தனன் இன்று தனது இரண்டாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

✻ பரந்தன் குமரபுரம் நடா, மகேந்திரன் ரஞ்சினி தம்பதிகளின் மகன் சத்யகலா இன்று தமது முதலாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

✻ சுன்னாகம் கிழக்கு சிவசக்திவேல் சாந்தகுமாரி தம்பதிகளின் மகன் சிவசாந் இன்று தனது இரண்டாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

✻ பிரான்ஸ் மரியநாயகம் காமினி தம்பதிகளின் மகன் கிறிஸ்டின் றொஷான் இன்று தனது மூன்றாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

✻ புங்குடுதீவு, திருநாவுக்கரசு பத்மலோஜினி தம்பதிகளின் மகள் விஜயலட்சுமி இன்று தனது பதினோராவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

✻ கிளிநொச்சி, திருநகர் நாயகம் வாசுகிதேவி தம்பதிகளின் மகள் திருமகள் தனது எட்டாவது பிறந்த நாளை இன்று கொண்டாடுகிறார்.

✻ யாழ். அரசடி வீதி, சிவலிங்கம் ஜெயந்தி தம்பதிகளின் மகன் துஷ்யந்தன் இன்று தனது ஐந்தாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

பாதை பழுதாகி பத்து மாதம் இன்னமும் திருத்தவில்லை!

(சாவகச்சேரி)

மகாதேவா தாம்போதியில் சேவையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த இயந்திரப் பாதை பழுதடைந்து கமார் பத்து மாதங்களாகியும் இதுவரை நெடுஞ்சாலைத் திணைக்களம் அதைப்பற்றிச் சிரத்தை எடுக்கவில்லை. இதனால் முழங்காவில் போன்ற குடியேற்றத் திட்ட விவசாயிகள் பெரிதும் பாதிப்புக்குள்ளாகி உள்ளனர்.

பொதுமக்களின் நலன் கருதி பொறியியலாளர் திரு. வாசுலிங்கம் இப்பொழுது அந்த இயந்திரப் பாதையைத் திருத்துவதில் சுறுசுறுப்பாக ஈடுபட்டுள்ளார்.

இப்பாதையை இப்பொழுது கரையேற்றி அதைப் புனரமைப்புச் செய்வதில் தொகையான தொழிலாளர்கள் தினமும் ஈடுபட்டுள்ளனர். பாதையைக் கரையேற்றும் முயற்சி சுறுசுறுப்பாக நடைபெறுகிறது.

இப்பாதை பழுது பார்க்கப்பட்டு மீண்டும் சங்குப்பிட்டிக்கும், கேரதீவுக்கும் இடையில் ஈடுபடுத்துவதற்கு சில மாதங்கள் செல்லலாம் எனத் தெரிகிறது.

உபய கதிர்காம அலங்கார உற்சவம்

(புலோலி)

ஈழத்தின் இரண்டாவது கதிர்காமமென அழைக்கப்படும் தென்புலோலியூர் அருள்மிகு தான்தோன்றி உபயகதிர்காம முருகனின் அலங்கார உற்சவம் இம்மாதம் 17-ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது.

இங்கு பதினாறு நாட்களுக்கு அலங்காரத் திருவிழா காலை 9.00மணி தொடக்கம் 12மணி வரை நடைபெறும். இறுதி நாளான அடுத்த மாதம் 1-ம் திகதி உபயகதிர்காம முருகனின் தீர்த்தத்திருவிழா நடைபெறும்.

ஏழாலையில் மகோற்சவம்

(யாழ்ப்பாணம்)

ஏழாலை புவனேஸ்வரி அம்மன் ஆலய வருடாந்த மகோற்சவம் கடந்த பன்னிரண்டாம் திகதி ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது. இருபதாம் திகதி தேர்த்திருவிழாவும் இருபத்து ஓராம் திகதி தீர்த்தத் திருவிழாவும் மறுநாள் பூங்காவனத் திருவிழாவும் நடைபெறவுள்ளன.

உருக்கமான வேண்டுகோள்

எமது குடும்பத் தலைவரும், எமது நிறுவன (City Medicals) உரிமையாளருமாகிய திரு. L. V. சிங்கராயர் 10-6-85 இல் சென்னையில் வைத்து இனந்தெரியாத இளைஞர்களால் கடத்திச் செல்லப்பட்டார்.

இவரைக் கடத்தியதன் மூலம் எமது குடும்பத்தினர் நிர்க்கதிக்காளாக்கப்பட்டிருப்பதோடு, இவரது நிறுவனங்களில் வேலைசெய்யும் சுமார் நாற்பது ஊழியர்களது குடும்பங்களும் வருமானம் இழக்கும் இக்கட்டான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். இச் சம்பவம் நிகழ்ந்து ஒரு மாதமாகியும் இவரைப் பற்றிய தகவல் எதுவும் கிடைக்காமையால் குடும்பத்தினரும், ஊழியர்களும் அநாதரவான நிலையில் மிகவும் கவலைகொண்டுள்ளனர்.

நாங்கள் அனைவரும் இவரை விடுதலை செய்து எமது கவலையைப் போக்குமாறு வேண்டுகின்றோம்.

487, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

தாய், சகோதர,
சகோதரிகள்,
ஊழியர்கள்.

கடமையை செய்த பின்னரே உரிமையை கேட்க வேண்டும்

(அச்சுவேலி)

"பதவிக்கும் பொறுப்புக்கும் தகுந்த மரியாதை அளித்து தமது கடமையை நிறைவு செய்த பின்புதான் உரிமையையும் சலுகையையும் கேட்க வேண்டும். இதனை விடுத்து தனிப்பட்ட கபறளத்திற்காகவும், சலுகைக்காகவும் பதவிப் பொறுப்புக்களில் இருப்பவர்களை தூஷிப்பதும் எதிர்ப்பதும் தண்டிக்கப்பட வேண்டிய குற்றமாகும்."

இவ்வாறு கூறினார் கோப்பாய் வட்டாரக் கல்வியதிகாரி திரு. எ. வி. தங்கராசா.

வாதரவத்தை ஸ்ரீ விக்னேஸ்வர வித்தியாலய ஆசிரியர் குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டு விசேட உரையாற்றிய திரு. எ. வி. தங்கராசா தொடர்ந்து உரையாற்றும் பொழுது நிர்வாகப் பொறுப்புக்களில் இருப்பவர்கள், அதிபரி பதவி வகிப்பவர்கள் பல்வேறு நெருக்கடிகளுக்குள்ளாகி இன்றைய காலகட்டத்தில் தமது கடமையைச் செய்கிறார்கள். ஆனால் அவர்கள் கடமையைச் செய்யும்போது தவறு ஏற்படலாம். அந்தத் தவறைத் தண்டிக்கும் பொறுப்பை அவருக்குக் கீழ் கடமை புரியும் உதவியாசிரியர் ஏற்றுக் கொள்வாரேயானால் கல்வியதிகாரிகளோ, திணைக்களமோ, கல்வியமைச்சோ இருக்கவேண்டிய தேவை இல்லாமல் போய்விடும்.

எதிர்கால சமுதாயத்தை உருவாக்க வேண்டிய பொறுப்பை ஆசிரியர் சமுதாயம் ஏற்றிருப்பதால் அவர்களது நடைமுறையை சமுதாயத்தில் இருப்பவர்கள், மாணவர்கள் பார்த்துக் கேலி செய்யக்கூடியளவு நடந்து கொண்டால் குறிப்பிட்ட நோக்கம் நிறைவு செய்யப்பட மாட்டாது எனக் கூறினார்.

அதிபர் திரு. எஸ். முத்துக்குமாரசுவாமி, உதவியாசிரியர் திரு. எஸ். மோகனதாஸ் ஆகியோரும் தமது கருத்துக்களை எடுத்துக் கூறினார்கள்.

சிரேஷ்ட கூட்டுறவு ஆணையாளர் பேச்சு:

கூட்டுறவு துறையில் பொதுமக்களுக்கிருந்த தொடர்பு இன்று குறைந்து வருகின்றது!

(சரவகச்சேரி)

"இன்று கூட்டுறவுச் சங்கங்களின் பொதுக்கூட்டத்தில், கூட்டுறவு அங்கத்தவர்களின் பிரதிநிதிகளே கலந்து கொள்வதனால், பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு, கூட்டுறவு இயக்கத்துடன் இருந்த நேரடித் தொடர்பு குன்றிவிட்டது. எனவே அங்கத்தவர்களின் பிரதிநிதிகளாகிய நீங்கள், சகல அங்கத்தவர்களும் கூட்டுறவுச் சங்கங்களுடன் நேரடித் தொடர்பை ஏற்படுத்திப் பயனடையச் செய்ய உழைக்க வேண்டும்."

இவ்வாறு யாழ். சிரேஷ்ட கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் திரு. க. சண்முகலிங்கம், சாவகச்சேரி பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் புதிய இயக்குநர் சபை தெரிவின் போது பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும்பொழுது குறிப்பிட்டார்.

சாவகச்சேரி டிறிபேக் கல் லொரி மண்டபத்தில் சங்கத் தலைவர் திரு. வி. எஸ். வைத்திலிங்கம் ஜே. பி. தலைமையில் நடைபெற்றது, திரு. சண்முகலிங்கம் தொடர்ந்து தனது உரையில் கூறியதாவது:-

பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு அங்கத்தவர்கள் யாவரும் சேர்ந்து தமது சங்கங்களின் பொதுக் கூட்டங்களை நடத்தினர். இன்றைய அமைப்பின்படி பிரதிநிதிகள் மட்டுமே கலந்துகொள்ள முடியும், இதனால்தான் கூட்டுறவு அங்கத்தவர்கள் சங்கத்துடன் நேரடித் தொடர்பு கொள்ள முடியவில்லை. பிரதிநிதிகள் உங்கள் கிளை மட்டத்தில் சகல அங்கத்தவர்களையும் ஈடுபடச் செய்து கூட்டுறவு இயக்க நன்மைகளை மக்கள் அனுபவிக்கச் செய்ய வேண்டும் என்றார்.

யாழ். கூட்டுறவு உதவி ஆணையாளர் திரு. சந்தையா தனது உரையில், இயக்குநர் சபை தொடர்ந்து 3 ஆண்டுகள் இயங்கும் எனவே நிறைய சாலகளாகத் தெரிவு செய்ய வேண்டும். இடையில் பெட்டிசம் போட்டு இயக்குநர் சபையை மாற்றியமைக்கும் எண்ணம் மட்டும் இருக்கக் கூடாது என்றார்.

தொடர்ந்து இயக்குநர் சபை தேர்தல் நடைபெற்றது இதில் கிழக்காண்போர் தெரிவு செய்யப்பட்டனர்; திரு. எஸ். வி. வைத்திலிங்கம் ஜே பி திரு. க. இளையதம்பி, திரு. கி. துரைராஜா, திரு. ச சரவணமுத்து ஜே பி., திரு. வ. பேரின்பநாதன், திரு வே. தம்பிப்பிள்ளை திரு. த. சிதம்பரப் பிள்ளை, ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

நாகரிக வரலாற்றில் விளையாட்டுத்துறை முக்கிய இடம் வகிக்கிறது

(உடுப்பிட்டி)

"நாகரிக வரலாற்றில் விளையாட்டுத்துறைக்கு மிகுந்த முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. தமிழ் மக்களின் இன்றைய கலைகட்டத்தில் கல்வித் துறையினைப்போல விளையாட்டுத்துறையும் பலவித சூழ்நிலைகளாலும் அருகிவருகிறது. இதனை நீர்க்கக்கூடிய வழிகள் பாடசாலைகளிடமே உள்ளன!" என்று கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரியின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய இக்கல்லூரின் ஓய்வு பெற்ற ஆசிரியர் திரு. ஏ சுப்பிரமணியம் சொன்னார்.

அதிபர் திரு. கே. சிவபாத சுந்தரம் தலைமையில் வைபவம் நடைபெற்றது.

திரு. சுப்பிரமணியம் மேலும் பேசும்போது, எங்கு தோல்வி ஏற்படுகின்றதோ அங்கு வெற்றியும் ஏற்படத்தான் செய்யும். ஆகவே வெற்றியின் மமதையில் மனதைக் குழப்பாமலும் தோல்வியின் கவலையில் மனதை இழக்காமலும் தொடர்ந்து பணியாற்றவேண்டும் என்பது விளையாட்டுப் போட்டிகள் நமக்குத்தரும் பாடங்களாகும்.

அதுடன் சிறந்த பயிற்சியும் நீதி, நிதானம், தூய்மை என்பனவும் வெற்றி பெற அவசியம் என்பதை விளையாட்டுப் போட்டியின்போது உணரக் கூடியதாக இருக்கும்.

இக்கல்லூரியின் விளையாட்டு மைதானத்தை விஸ்தரிப்பதில் பெரும் பங்காற்றிய அமரர் கே. ஸ்ரீ. நடராசாவுக்கு நினைவு இல்லம் அமைக்கப்பட வேண்டும்" என்றார்.

ஆசிரியர் திரு ஏ.எம். ஜெயரத்தினம் தமது நன்றி உரையில், "வகுப்பறையில் மட்டுமல்ல, விளையாட்டு மைதானத்திலும் மாணவர்கள் பலவற்றைக் கற்க நேரிடுகிறது" என்றார்.

இப்போட்டியில் முறையே இராமசாமி (265); சின்னத்தம்பி(207); சிற்றம்பலம்(163) கிருஷ்ணபிள்ளை (158); ஆகியன வெற்றிபெற்றன.

வகுப்பறையிலும் பார்க்க

விளையாட்டு மைதானத்தில் பெறும் கல்வியே முக்கியம்

(சித்தன்கேணி)

மாணவர்கள் வகுப்பறைகளில் கற்கின்ற கல்வியை விட விளையாட்டு மைதானத்தில் கற்கின்ற கல்வியே மிக முக்கியமானது. எதிர்கால நற்பிரஜைகளாக உருவாக்கப்படும் மாணவர்களுக்கு இக்கல்வி மிக மிக இன்றியமையாதது என்பதை யாவரும் ஏற்றுக் கொள்வர். மாணவர்கள் ஒழுக்கம், கட்டுப்பாடு, சகிப்புத்தன்மை, விட்டுக்கொடுக்கும் மனப்பக்குவம் முதலான நற்பண்புகளையெல்லாம் விளையாட்டு மைதானத்திலேயே விசேடமாகக் கற்றுக்கொள்கிறார்கள்.

சண்டிலிப்பாய் இந்துமகா வித்தியாலயத்தில் நடைபெற்ற மெய்வல்லுநர் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய மானிப்பாய் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. எஸ். தனஞ்சயன் மேற்கண்டவாறு கூறினார்.

வித்தியாலய அதிபர் திரு. எஸ். அமிர்தலிங்கம் தலைமையில் இப்போட்டி நடைபெற்றது.

ஒய்வு பெற்ற அதிபர் திரு. கே. வைத்தியநாதஐயர், முன்னாள் அதிபர் திரு. எஸ். எம். மூர்த்தி ஆகியோர் மங்கள விளக்கேற்றி வைபவத்தை ஆரம்பித்துவைத்தனர். முன்னாள் உப அதிபர் திரு. ஆர். விசுவநாதன் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டார்.

சேர, சோழ, பாண்டியன் இல்லங்களுக்கிடையே நடைபெற்ற இவ்விளையாட்டுப் போட்டியில் 383 புள்ளிகளைப் பெற்ற சோழன் இல்லம் முதலாவது இடத்திற்கான 'சம்பியன்' கேடயத்தைத் தனதாக்கிக் கொண்டது. சேரன் இல்லம் 318 புள்ளிகளையும், பாண்டியன் இல்லம் 223 புள்ளிகளையும் பெற்று முறையே இரண்டாம் மூன்றாம் இடங்களைத் தட்டிக்கொண்டன.

தனியார் பஸ்களின்கட்டணம் 'இறங்க' மறுக்கிறதாம்!

(அச்சுவேலி)

ஏறிய கட்டணம் இறங்க மறுக்கிறது. அதிகரிப்புக்குப் பொறுப்பாக இருந்தவர்கள் கட்டணத்தை மீண்டும் பழைய நிலைக்குக் கொண்டு வருவதில் கவனம் செலுத்தாமையினால் தனியார் பஸ் சொந்தக்காரர்கள் தமது தனிப்பட்ட விருப்பத்திற்கேற்ப பல்வேறு விதத்திலும் கட்டணத்தை அதிகரித்து பிரயாணிகளிடம் அறவிடுகின்றார்களாம்.

அண்மைக் காலத்தில் வடபகுதியில் ஏற்பட்ட எரிபொருள் தட்டுப்பாட்டை முன்னிட்டு எரிபொருள் விலை அதிகரிப்புக்கேற்ப தனியார் பஸ் சொந்தக்காரர்கள் சங்கம் கட்டண அதிகரிப்பை பிரயாணிகளுக்கு தகுந்த முறையில் அறிவித்து வழமையான கட்டணத்திலும் பார்க்கக்கூடிய கட்டணத்தை அறவிட்டு வந்தார்கள். ஆனால் தற்பொழுது எரிபொருள் விநியோகம் சீராகி சாதாரண நிலைக்கு வந்துள்ள போதிலும் தனியார் பஸ் கட்டணம் பழைய நிலைக்குத் திரும்பவில்லை என பிரயாணிகள் அங்கலாய்க்கின்றனர். இந்த விடயத்தில் தனியார் பஸ் சொந்தக்காரர் சங்கங்களும் தகுந்த கவனம் செலுத்த வேண்டும் என பேசப்படுகின்றது.

இலங்கை போக்குவரத்துச் சபை பஸ் கட்டணத்திலும் பார்க்க குறைந்த கட்டணத்திலும் சமனான கட்டணத்திலும் முன்பு பிரயாணம் செய்த பாதைகளில் தற்பொழுதும் அதிகரித்த கட்டணத்தில் பிரயாணம் செய்ய வேண்டிய நிலை இருந்து வருகின்றதாம்.

பருத்தித்துறை சிவன் கோவில் அம்மன் இரதோற்சவம் 20 ம் திகதி சனிக்கிழமையும் தீர்த்தோற்சவம் 21 ம் திகதியும் அம்பாள் திருக்கல்யாண உற்சவம் 22 ம் திகதியும் நடைபெறும்.

பருத்தித்துறை சிவன் கோவில் அம்மன் இரதோற்சவம் 20 ம் திகதி சனிக்கிழமையும் தீர்த்தோற்சவம் 21 ம் திகதியும் அம்பாள் திருக்கல்யாண உற்சவம் 22 ம் திகதியும் நடைபெறும்.

பயணிகள் சிரமம்

(மிருசுவில்)

சில மாதங்களுக்கு முன்னர் மிருசுவில் புகையிரத நிலைய மேடை மின் விளக்குகளுக்குப் பொருத்தப்பட்டிருந்த வயர்கள் இனந்தெரியாதோரால் திருடப்பட்டதால் புகையிரதமேடை இரவுவேளை இருளில் மூழ்கிக் கிடக்கின்றது. இதனால் பயணிகள் பல சிரமங்களுக்கு உள்ளாகின்றார்கள்.

பாடசாலை குறைகளை தீர்மானம்

(சுழிபுரம்)

சுழிபுரம் ஐக்கிய சங்கவித்தியாசாலை பெற்றோர் ஆசிரியர் சங்கக் கூட்டம் அண்மையில் கூட்டப்பட்டது.

தற்போது பாடசாலையில் ஏற்பட்டுள்ள ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய வசதிப்பணக் கட்டணத்தில் ஆசிரியர்களை நியமிப்பது என்றும், தளபாடப் பற்றாக் குறையைத் தீர்க்க பெற்றோர்களிடமும் நலன் விரும்பிகளிடமும் நிதி வசூலித்து அதன் மூலம் தளபாடப் பற்றாக்குறையைத்தீர்ப்பதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

தலைவர் திரு. கே. வேலாயுதபிள்ளை பாடசாலையின் வளர்ச்சிக்கு அரும்தியுப் பெற்றோர் நலன்விரும்பிகளினதும் ஆதரவைக் கோரினார்.

ஒய்வு பெற்றார்

(கல்வியங்காடு)

நல்லூர் வடக்கு ஞானோதய வித்தியாசாலையின் அதிபராகப் பணிபுரிந்த திரு. பொ. நல்லையா ஓய்வு பெற்றுள்ளார். தற்போதைய அதிபர் திரு. இ. சிவராசா தலைமையில் ஆசிரியர்கள் மாணவர்கள் ஆகியோர் பிரிவுபசார வைபவம் நடாத்தி அவரது சேவைகளைப் பாராட்டிப் பேசினர்.

அந்தியேட்டி கிரியை சபிண்டீகரணை அழைப்பிதழ்



அன்புடையீர்!

காரைநகர் பாலாவோடையைப் பிறப்பிடமாகவும் தனகராயன்குளத்தை தொழிலிடமாகவும் கொண்டு வாழ்ந்த எனது தந்தையார் திரு. சுப்பர் கணபதிப்பிள்ளை அவர்கள் 19-6-85 இயற்கை எய்திவிட்டார். அன்னரின் அந்தியேட்டியும் வீட்டுக் கிருத்தியமும் 19-7-85 வெள்ளிக்கிழமை நடைபெறும். தயவு செய்து உற்றார் உறவினர் நண்பர்கள் இதில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகிறேம்.

அன்னரின் ஆத்மா சாந்தி அடைய பாலாவோடை குறிஞ்சாக்குழி முத்துமாரி அம்பாளை பிரார்த்திக்குமாறு பணிவுடன் வேண்டுகிறேம்.

இவர்கள்

அம்பிகை, பாலாவோடை, காரைநகர்

இப்படிக்கு

க. சிவசுப்பிரமணியம் (மகன்)

திருமதி. சி. தனலட்சுமி (மருமகள்)

சுன்னாகம் பொன்னாலையில் ஆடிப்பூர விழா

(சங்கானை)

பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் ஆலய ஆடிப்பூர விழாவும், அஷ்டோத்தர சகஸ்ர சங்காபிஷேகம், விசேட ஹோமமும், ஸ்ரீ திவ்வியப் பிரபந்த பாசுரம் ஒதுதலும், ஸ்ரீ ராம பஜனைப் பூர்த்தி விழாவும் எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை நடைபெறும்.

108 கலச பொங்கல் விழாவும் அன்று ஆலய வீதியில் நடைபெறும். 108 விசேட பொங்கலில் கலந்து கொள்வோர் முன்கூட்டிய ஏற்பாடு செய்ய வேண்டும். நாட்டு நலனுக்காக இறையருள் வேண்டி பாசுரம் ஒதுதலும், பஜனையும் தினமும் நடைபெற்று வருகின்றன.

உதய சிந்தனை

"நோயாளி ஒருவன் தான் நலமாக இருப்பதாக நம்புவானெனில், அவன் தவறிழைக்கிறான் என்பதை முதலில் உணர்த்துவது தேவையாகும்."
—டிமிற்றி பிசாரவ்

87, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 23336

இதயஒலி

19-7-1985 வெள்ளிக்கிழமை (குரோதன ஆடி 4)

இன்றைய காலத்தில் இதுவும் அவசியமே!

புனைகதை இலக்கியம், கவிதை, கட்டுரை ஆகிய நூல்கள் வெளியிடப்படுமளவுக்கு சமய நூல்கள் வெளியிடப்படுவதில்லை என்ற குறை எம்மத்தியில் நீண்டகாலமாகவே இருந்து வருகின்றது.

சில கோவில்கள் பற்றிய பிரசுரங்கள் அந்தந்தக் கோவில்களின் உற்சவகாலங்களில் வெளிவருவதுண்டு

அல்லது உற்சவ காலங்களில் ஆலயங்கள்பற்றிய சுருக்க வரலாற்றுக் கட்டுரைகள் பத்திரிகைகளில் சஞ்சிகைகளில் வெளியிடப்படுவதுண்டு.

மில்க் வைற், குளோபல் போன்ற நிறுவனங்களின் அதிபர்கள் உற்சவ காலங்கள், திருவிழாக்களின் போது தேவார திருவாசக நூல்களை, கையடக்கமான பிரசுரங்களாக, இலவசமாக வெளியிடும் பணியை மேற்கொண்டு வருகின்றனர்.

தமிழகத்தில் இலக்கிய நூல்கள் வெளியிடப்படும் வேகத்தில், சமயநூல்களும் வெளியிடப்படுகின்றன.

பல பிரசுர நிலையங்கள் சமயநூல்களை வெளியிடவென்றே உருவாக்கப்பட்டுள்ளன.

ஆனால் இலங்கையின் நிலை வேறு. அவ்வப்போது வெளியிடப்பட்ட பல சமய நூல்கள், விற்பனை நிலையங்களில் தூசு படிந்தனவாக இன்றும் காணப்படுகின்றன.

இந்த நிலையிலும், ''இத்தி மரத்தாள்'' என்ற ஆலய வரலாற்று நூலை எழுதி வெளியிட்ட பேராசிரியர் சண்முகதாஸ், அவர்தம் துணைவியார் மனோன்மணி சண்முகதாஸ் ஆகியோர் அனைவரதும் பாராட்டுக்குரியவர்களாகியுள்ளனர்.

வடமராட்சியில் கோயில்கொண்டு எழுந்தருளியிருக்கும், தும்பளை நெல்லண்டைப் பத்திரகாளியம்மன் கோவில் வரலாற்று ஆய்வு நூலான இப்பிரசுரம் ''வராஹஸ்ரீ அன்பர் வெளியீடாக'', முழுக்க முழுக்கப் பொதுமக்களின் உதவியுடன் வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

இவ்வைபவத்திற்குத் தலைமை தாங்கிப் பேசிய யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் தமதுரையில் குறிப்பிட்டதுபோல இராமப் புறமொன்றின் சமயவாழ்க்கையைத் திரட்டித்தரும் வரலாற்று நூலாக மட்டுமன்றி, வரலாற்று நோக்கில் ஒரு பகுதியைக் காட்டும் சமூக வாழ்க்கை நூலாகவும் ''இத்தி மரத்தாள்'' அமைந்துள்ளது

ஆலய வரலாறுகளை நூலாக வெளியிடும் பணியொன்றினை இந்து சமயத் திணைக்களம் சில வருடங்களுக்கு முன் ஆரம்பித்தது.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள மூப்பது சைவாலயங்கள் பற்றிய விபரக் கட்டுரைகளுடன் ''மட்டக்களப்பு சைவக் கோவில்கள்'' என்ற நூலும், திருகோணமலை மாவட்டத்திலுள்ள அறுபத்தைந்து கோவில்களின் விபரங்களுடன் ''திருகோணமலை மாவட்ட திருத்தலங்கள்'' என்ற நூலும் இத்திணைக்களத்தால் இதுவரை வெளியிடப்பட்டுள்ளன.

மற்றைய தமிழ் மாவட்டங்களிலுள்ள ஆலயங்கள் பற்றி இந்துசமய திணைக்களம் மௌனம் சாதித்து வருவது வேதனைக்குரியதாகும்.

இராஜராஜன் நிறுவிய பொலனறுவை சிவன்கோவில் போன்ற எத்தனையோ புராதன ஆலயங்கள் சிங்களப் பகுதிகளில் இன்றும் இருக்கின்றன.

இவைகளைப் பற்றிய ஆய்வு நூல்கள் தாமதமின்றி வெளிவரவில்லையாயின், அவைகள் புராதனச் சின்னங்களாகக் கூடப் பேணிக் காக்கப்படுமா என்பது சந்தேகத்துக்குரியதாகும்.

ஈழத்து இந்து மத வழிபாடு பற்றி விரிவான ஆராய்ச்சி உடனடியாக நடத்தப்பட வேண்டுமென்று ''இத்தி மரத்தாள்'' நூல் பற்றிய ஆய்வுரையை நிகழ்த்திய யாழ்ப்பாணப் பல்கலைக் கழக வரலாற்றுத்துறைத் தலைவரும், தொல்லியல் நிபுணருமான கலாநிதி சி. க. சிற்றம்பலம் விடுத்த வேண்டுகோள் காற்றோடு காற்றுக் சென்று விடக்கூடாது என்பதை நாம் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

ஈழத்துத் தமிழரின் வரலாறு இந்து சமயத்துடன் பின்னிப் பிணைந்தது.

ஈழத் தமிழரின் வரலாறு எழுதப்படும்போது, இந்து சமய வரலாற்றைப் பிரித்து வைத்து அணுக முடியாது

எனவே, ஈழத்து இந்துமத வழிபாடு பற்றிய ஆய்வை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தைக் களமாக வைத்து மேற்கொள்வதே சாலப் பொருத்தமானது என்பது எமது கருத்தாகும்

பேராசிரியர் வித்தியானந்தன் துணைவேந்தராகப் பதவி வகிக்கும் இக்காலகட்டத்தில், கலாநிதி சிற்றம்பலம், பேராசிரியர்கள் கைலாசநாதக் குருக்கள், சண்முகதாஸ், வேலுப்பிள்ளை சுவித்தம்பி போன்ற அறிஞர் குழாம் ஒன்றுகூடி இந்த நன்முயற்சியை, இப்போதே ஆரம்பிப்பது வரவேற்கத்தக்கது.

பணமும், மனமும்படைத்த பலர் இதற்கு உதவிபுரிய முன்வருவார்கள் என்பது நிச்சயம்.

அஹிம்சாமூர்த்தி காந்தியின் வருகையால் புனிதம் பெற்ற யாழ். மத்திய கல்லூரி

மெதடிஸ்த கிறிஸ்தவ சபையின் முயற்சியால் வெஸ்லியன் ஆங்கில கல்வி நிலையம் 1917-ம் ஆண்டில் யோன் லிஞ்ச் என்ற அயர்லாந்து நாட்டு மதபிரசாரகரால் 120 மாணவர்களோடு ஆரம்பிக்கப்பட்டது. 1834-ம் ஆண்டில் வெஸ்லியன் ஆங்கிலக் கல்வி நிலையம் 250 மாணவர்களோடு யாழ். மத்திய கல்லூரியாகப் பரிணமித்து வட பகுதியில் உயர் கல்வி நிலையமாகியது. இக் கல்லூரியின் முதல் அதிபராகத் தமிழ் வளர்த்த கிறிஸ்தவரான வணக்கத்துக்குரிய கலாநிதி பீற்றர் பெர்சிவல் அவர்கள் பொறுப்பேற்று நடத்தினார்.

வீரசிங்கம் மண்டபம், மணிக்கூட்டுக் கோபுரம், திறந்த வெளியரங்கு, பொது சன நூலகம், மரகதப் பச்சை முற்றவெளி ஆகியவற்றின் அருகாமையில் காலவெள்ளத்தையும் கடந்து நிற்கும் பழையதும் புதியதுமான கட்டடங்கள் – இதுதான் இன்று 150 –வது ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாடும் யாழ். மத்திய கல்லூரி.

1834ம் ஆண்டில் இருந்து இன்று வரை யாழ். மத்திய கல்லூரி குடாநாட்டு மக்களின் கல்விக்காகவும் நாட்டின் நல் வாழ்வுக்காகவும் அளப்பரிய சேவைகளை ஆற்றி வருகிறது. இலங்கையில் சமூக வாழ்க்கையில் பல் துறைகளிலும் பிரபலஸ்தர்களை உருவாக்கிய பெருமை இக்கல்லூரிக்குண்டு. யாழ்ப்பாணக் குடாநாடு பெருமையுறும் கல்லூரிகளில் ஒன்றாக இக் கல்லூரி இன்று வரை திகழ்ந்து வருகிறது.

150 ஆண்டுகள் ஓர் கல்லூரியின் வாழ்க்கையில் நீண்ட காலம். இக் காலப்பகுதியில் இக் கல்லூரியின் சாதனைகள் பல

இக் கல்லூரி ஏறக்குறைய 40 வருடங்களாகக் கல்கத்தா, சென்னை பல்கலைக் கழகங்களின் இணைப்புக் கல்லூரியாக விளங்கியது. இக்காலப் பகுதியில் இங்கு கல்வி கற்றவர் பலர் இலங்கையிலும், உலக அரங்கிலும் முதன்மை பெற்று தமிழ் மக்களுக்கும், பிறந்த பொன்னாட்டுக்கும் புகழ்சூட்டிக் கொடுத்தார்கள்.

இக் கல்லூரி ஒரு தேசிய மறுமலர்ச்சிக் கல்லூரி என்பதைப் பலரி அறியாது இருக்கலாம். இலங்கைத் தேசிய காங்கிரஸ், இளைஞர் காங்கிரஸ், தமிழ் மகாஜன சங்கம் ஆகிய இயக்கங்களுக்கு வித்திட்டவர்கள் பலர் இக் கல்லூரியின் மாணவர்களாகவும், ஆசிரியர்களாகவும் விளங்கியவர்கள்.

தமிழில் புதிய வசன நடையை எழுதி சைவத்தையும் தமிழையும் ஒருங்கே வளர்த்த ஆறுமுகநாவலர் இக்கல்லூரியின் முன்னாள் மாணவரும் ஆசிரியருமாவார்.

கல்லூரியில் ஆத்மீகமும் பகுத்தறிவும் தாராளமாகச் சங்கமித்தது. ஈழத்தில் பகுத்தறிவாளரில் முன்னோடி எனக் கருதப்படும் ஏப்பிரகாம் கோலூர் இக்கல்லூரியின் முன்னாள் ஆசிரியர்களில் ஒருவர்.

யாழ் மத்திய கல்லூரியின் அதிபராயிருந்த வண. திரு. கி. ஏ. சிமித் சுமார் 30 வருடங்களுக்கு முன் தொழிற் கல்வியை அறிமுகப்படுத்தினார். இந்நாட்டின் கல்விமான்களும், அரசாங்கமும் அண்மைக்காலத்திலேயே இக் கல்வியின் முக்கியத்துவத்தை விளங்கித் தொழிற் கல்வியை நாடளாவிய முறைப்படுத்தத் தொடங்கினர். 1920களில் முதன் முதலாக யாழ்ப்பாணத்தில் இக் கல்லூரியில் வர்த்தக வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டன.

அஹிம்சாமூர்த்தி அண்ணல் காந்தி தமது இலங்கை விஜயத்தின் போது, கல்லூரிக்கு வருகை தந்து மாணவர்-ஆசிரியர் மத்தியில் உரை வழங்கி கல்லூரியைப் புனிதப்படுத்தினார்.

ஆச்சிரம வாழ்க்கை முறையை கிறிஸ்துவ திருச் சபைக்கு அறிமுகப்படுத்திய சேவாக் செல்வரெத்தினமும் இக் கல்லூரியின் பழைய மாணவர்களில் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது. அவர் சேவைக்குச் சான்றாக இன்றும் சுன்னாகத்திலும் கிராவிலும் ஆச்சிரமங்கள் செயற்படுகின்றன.

தலைசிறந்த ஆங்கில எழுத்தாளர் அமரர் சுப்பிரமணியமும் இக் கல்லூரியின் பழைய மாணவர்களில் ஒருவர்.

கல்வியாளரும், மனிதநல வாதியுமான ஏ. ஈ. தம்பர், கலாவிமர்சகர் சிலப்புலவர் க. நவரத்தினம், உலகம் போற்றும் சமய வித்தகரான வண. கலாநிதி டி. பி. நயில்ஸ் ஆகியோர் கல்லூரியின் வாழ்க்கையில் சகல துறைகளிலும் மாணவராகவும் ஆசிரியராகவும், அதிபராகவும் இருந்து கல்லூரியை வளப்படுத்தினார்கள். இவர்களின் ஆளுமையால் கல்லூரி பெயரும் புகழ் அடைந்தது.

இக் காலப் பகுதியில் இக் கல்லூரி வாழ்க்கையின் சகல துறைகளிலும் உருவாக்கிய யனுள்ள குடிமக்கள் எல்லோரையும் இங்கு நிரைப்படுத்தல் சிரமமாகும்.

வாழ்க்கையில் எத்தனையோ துறையினையும் கல்வித் துறையில் அணுகுபவர்களுக்கு இக் கல்லூரி கடந்த காலம் போல் எதிர்காலத்திலும் 150 ஆவது ஆண்டு நிறைவு அதிபர் திரு. V, பாலசுந்தரத்தின் வழிகாட்டலில் கைகொடுத்து உதவும் என்பது எமது எதிர்பார்ப்பும், ஆசையுமாகும்.

– 6ஆம் பக்கம் பார்க்க

இலங்கைத் தேசிய காங்கிரஸ், இளைஞர் காங்கிரஸ், தமிழ் மகாஜன சங்கம் ஆகிய பல வரலாற்றுப்பெருமைமிக்க அமைப்புக்களுக்கு வித்திட்டவர்கள் யாழ் மத்திய கல்லூரியின் மாணவர்களாகவும், ஆசிரியர்களாகவும் விளங்கியவர்கள் என்பதை இன்று பலர் அறியார். நூற்றிருண்டு விழாக் கொண்டாடும் மத்திய கல்லூரியின் வரலாற்றினை இங்கு சுருக்கமாக எழுதியுள்ளவர் அதன் ஆசிரியர்களில் ஒருவரான திரு. இ. ஆர், திருச்செல்வம்.

நாளை தேர் உற்சவம்

அரியாலை பிரப்பங்குளம் ஸ்ரீ மகாமாரி அம்பாள்

— சி. க, சண்முகரத்தினம்

யாழ்ப்பாணத்தில் பழமையும், தொன்மைச் சிறப்பும் பெற்று விளங்கிய ஆலயங்களில் அரியாலை பிரப்பங்குளம் மகாமாரி அம்பாள் ஆலயமும் ஒன்றாகும்.

இவ் ஆலயம் அரியாலை மாம்பழம் சந்திக்கு அண்மையில் கண்டி வீதியில் அமைந்திருக்கும் பிரப்பங்குளத்திற்கு அருகே கம்பீரமான தோற்றப் பொலிவுடன் காவற் தெய்வமாக அருட்பொலிவுடன் காட்சியளிக்கின்றது.

இவ் ஆலயத்தின் முன்முன்றலில் பச்சை பசுமை நிறைந்து உயர்ந்து படர்ந்து வளர்ந்த மருத விருட்சமும் ஆலயதிற்கு ஒரு பேரழகைக் கொடுக்கின்றது இவ் மருத விருட்சத்தின் நிழலில் சைவத்தையும், தமிழையும் வளர்த்த ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர், அவர்கள் நாவலர் வீதியாக நடந்து வந்து ஆலயதரிசனமும் சமயப் பிரசங்கங்களும் செய்துவிட்டு இவ்விருட்சத்தின் கீழ் இளைப்பாறி ஸ்ரீ இலந்தைக்குளம் பிள்ளையார்கோவில். ஸ்ரீ சித்தி விநாயகர் கோவில் முதலாம் தலங்களுக்குச் சென்று தொண்டாற்றி வந்தார்கள்.

சின்னஞ்சிறு குடிசையில் தோன்றிய அன்னையை மழை காலத்தில் வெள்ளத்தையும் கொடிய விஷப்பாம்புகளையும் பொருட்படுத்தாது அம்பாளை அடியார்கள் பக்தி சிரத்தையுடன் வழிபட்டு வந்தார்கள். அம்பாளின் பேரருள் கிடைத்த பக்தர்கள் நாளொருவண்ணமும் பொழுதொருமேனியுமாக ஆலயத்தை ஆகம விதிப்படி கட்ட ஆரம்பித்தனர்.

தனிநபர் பரிபாலனத்தின் கீழ் இயங்கி வந்த ஆலயம் அன்னையின் அருளால் அடியார்களின் நிர்வாகத்தின் கீழ் வந்தது. அம்பாள் காட்டிய பேரருளினால் ஊர் மக்களின் கஷ்டங்களும் நீங்கின. இதனை உணர்ந்த அடியார்கள் மேலும் பல திருப்பணிவேலைகளைச் செய்து இரண்டு ஆண்டுகளுக்கு முன் கும்பாபிஷேகம் செய்து சென்ற ஆண்டு முதன் முதலாக மஹோற்சவத்தை ஆரம்பித்தனர்.

பக்தர்களுக்கு அருள்பாலித்து அவரகத்தே பதுங்கியிருக்கும் காம குரோதம் மதம் மாற்சரிய முதலிய கொடூர நாசசக்திகளை கெட்டொழிய வைத்து சத்தியம், தர்மம், அன்பு, அஹிம்சை முதலாம் அருட்பண்புகளை பக்தர்களுக்கு அருளி, அன்னபூரணியாகவும், ஆனந்தரூபியாகவும், ரோக

– 6ஆம் பக்கம் பார்க்க

பயங்கரவாதத்திற்கு மரணதண்டனை விதிக்க

குவைத்தில் புதிய சட்டம்!

(குவைத்)

பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு மரணதண்டனை விதிக்க வழிவகுக்கும் கடும் சட்டம் குவைத்தில் கொண்டுவரப்பட்டுள்ளது. வெடிமருந்துகளை வைத்திருத்தல், பயன்படுத்தல் ஆகியனவற்றிற்கு மரணதண்டனை விதிக்க இப்புதிய சட்டம் இடமளிக்கிறது. இதற்கு தேசிய சட்டசபை அங்கீகாரம் அளித்தது. குவைத் அமீரின் கொலை முயற்சி மற்றும் கடந்தவாரம் இடம்பெற்ற குண்டுவெடிப்புகள் ஆகியனவற்றைக் கருத்திற் கொண்டே இப்புதிய சட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது. இக்குண்டு வெடிப்புகளால் எண்மர் மாண்டனர், எண்பத்து எட்டுப்பேர் காயமுற்றனர்.

இப்புதிய சட்டம் விரைவுடன் அமுல் படுத்தப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இது இவ்வாறு இருக்க, குவைத்தில் சமீபத்தில் இடம்பெற்ற வன்முறைகளையிட்டுப் பாரதம் தனது கண்டனத்தைத் தெரிவித்துள்ளது.

எவ்வகையில் பயங்கரவாதம் உருவெடுத்தாலும் அதனை பாரதம் எதிர்க்குமென்று தெரிவித்துள்ளது. இச்சம்பவங்களால் குவைத்தில் ஏதுமறியா மக்களே பாதிக்கப்பட்டனர் என்று பாரத அரசங்க அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

ஆஸி. தலைவர்-சூல்ட்ஸ் விரிவான பேச்சுவார்த்தை

(கான்பரா)

அமெரிக்க ராஜாங்க அமைச்சர் திரு. ஜோர்ஜ சூல்ட்ஸ் அவுஸ்திரேலியாவுக்கான தனது விஜயத்தை நிறைவு செய்துகொண்டதாக கான்பரா அறிக்கைகள் தெரிவித்தன.

தனது இவ்விஜயத்தின் போது அவர் அவுஸ்திரேலியப் பிரதம மந்திரி திரு. பொப் ஹௌகே, வெளிநாட்டமைச்சர் திரு. பில் ஹெய்டன் ஆகியோரைச் சந்தித்து விரிவான பேச்சுவார்த்தைகள் நடத்தினார்.

பாதுகாப்பு நடவடிக்கைகள், இருதரப்பு உறவுகள் என்பன ஆராயப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

அடுத்தவருடம் சீனவிஜயம்

(ஒட்டாவா)

கனடாப பிரதம மந்திரி திரு. பிறியன் முள்ரோனே அடுத்தவருடம் சீனாவுக்கு உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றினை மேற்கொள்ளவுள்ளார்.

ஒட்டாவாவில் சீன ஜனாதிபதி திரு. லீ-ஷியாமியானைச் சந்தித்து உரையாடியபோது அவர் இதனைத் தெரிவித்தார்.

இச்சந்திப்பு இருமணித்தியாலங்கள் நீடித்தது. சீனாவுக்கு விஜயம் செய்யுமாறு விடுக்கப்பட்ட அழைப்பைத் தான் ஏற்றுக் கொள்வதாக அப்போது அவர் சொன்னார்.

சத்திர சிகிச்சையையடுத்து எழுந்துள்ள நிலைமை

மூன்றரை வருடம் றீகனால் பதவியில் நீடித்திருக்க முடியுமா எனச் சந்தேகம்

(வாஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதி திரு. ரொனால்ட் றீகனுக்குப் புற்றுநோய் இருப்பதாக மருத்துவச் சிகிச்சைகள் மூலம் தெரிய வந்துள்ளதால் அவரால் தொடர்ந்து மூன்றரை வருடங்கள் பதவிவகிக்க முடியுமா? என்ற சந்தேகம் அரசியல் அவதானிகளிடையே ஏற்பட்டுள்ளது.

எனினும் நவம்பர் மாதம் ஜெனீவாவில் நடைபெறவுள்ள சோவியத் கம்யூனிஸ்ட் தலைவர் திரு. கொர்பசெவ்வுடனான உச்சிமாநாட்டில் கலந்து கொள்ளும் தேக ஆரோக்கியத்துடன் அவர் இருப்பார் என நம்பிக்கை தெரிவிக்கப்படுகிறது.

திரு. றீகன் தற்போது நல்ல நிலையில் இருப்பதாகவும் சனிக்கிழமை நடைபெற்ற சத்திரசிகிச்சையின் பின் திரவ உணவு உட்கொள்ள அவருக்கு டாக்டர்கள் அனுமதி வழங்கியுள்ளனர் என்றும் நேற்றுத் தெரிவிக்கப்பட்டது.

புதிய அமெரிக்க தூதுவர்

(வாஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதி திரு. ரொனால்ட் றீகன் பாரதத்துக்கான புதிய அமெரிக்கத் தூதராக திரு ஜோன் கந்தர் டீனை நியமித்துள்ளார்.

திரு. டீன் ஐம்பத்து ஒன்பது வயதுடையவர். 1981ம் வருடம் வரை தாய்லாந்தில் அமெரிக்கத் தூதராகப் பணியாற்றியவர்.

அதற்கு முன்னர் லெபனான், டென்மார்க், வியட்நாம் ஆகிய நாடுகளிலும் தூதராகப் பணியாற்றினார்.

பாரதத்தில் இது வரை அமெரிக்கத் தூதராக திரு. ஹரி பான்ஸ் கடமையாற்றி வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

அரியாலை ...

— 4-ஆம் பக்கத் தொடர்

நிவாரணியாகவும் கலியுகத்தின் கண்கண்ட தெய்வமாகவும் அமர்ந்திருந்து இக்கோயிலில் என்னை ஸ்ரீ மகாமாரி அருள் பாலிக்கிறாள்.

நாளை சனிக்கிழமை தேர் உற்சவமும் நிகழவுள்ளது. நாளை காலை 7-00 மணிக்கு வசந்த மண்டபப் பூசையும் காலை 8-30 மணிக்கு அம்பாள் தேருக்கு ஆரோகணித்தலும் நிகழத் திருவருள்பாலித்துள்ளது. நாளை மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை 7-00 மணிக்கு வசந்த மண்டபப் பூசையும் அதனைத்தொடர்ந்து தீர்த்த உற்சவமும் நிகழ திருவருள் பாலித்துள்ளது. எனவே அடியார்கள் யாவரும் அன்னை ஸ்ரீ மகாமாரியை வழிபாடு இயற்றி அருள் பெறும் வாய்ப்பை பெறுவார்களாக.

தலையில் வெற்றுப் பானை ★ புதுமை ஊர்வலம் ★

(சேலம்)

சேலத்தில் சேயிழையரும் சேர்ந்து நடத்திய பிரமாண்டமான புதுமை ஊர்வலம் ஒன்றினால் நகரில் மாமுல் வாழ்க்கை ஸ்தம்பித்தது. குடிநீர்ப்பிரச்சினையில் அரசின் கவனத்தை ஈர்க்கும் பொருட்டு தலைகளில் வெற்றுப் பானை ஞாடன் மக்கள் இவ்வூர்வலத்தை நடத்தினர். பெருமளவில் பெண்களும் இதில் கலந்து கொண்டனர். இந்த பரபரப்பால் பஸ் போக்கு வரத்துகள் பாதிக்கப்பட்டன, கடைகள் மூடப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது.

பெல்ஜிய துணை ஜனாதிபதி ராஜினாமா

(பிறசெல்ஸ்)

பெல்ஜியத்துணைப் பிரதம மந்திரி திரு ஜீன்கொல் தனது பதவியை ராஜினாமாச்செய்து விட்டதாக அறிவிக்கப்பட்டது.

விளையாட்டுப் போட்டி ஒன்றில் முப்பத்து எட்டுப்பேர் இறப்பதற்கு யார் காரணம் என்ற விடயத்தில் உண்டான கருத்து வேறுபாட்டால் பெல்ஜிய அரசாங்கத்தில் பிளவு உண்டாகியுள்ளது தெரிந்ததே.

பெண உளவாளி 18 வருட சிறை

(லொஸ் ஏஞ்சல்ஸ்)

சோவியத் பெண் உளவாளி ஒருவருக்கும் பதினெட்டு வருடச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

தீவிர வாதிகள் கைதாகினர்

(கெய்ரோ)

எகிப்திய அரசாங்கம் நாற்பத்து ஏழு முஸ்லீம் தீவிர வாதிகளைக் கைது செய்துள்ளதாகக் கெய்ரோ அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

பாரதத்திற்கு சிறப்புப் பரிசு

(மாஸ்கோ)

உலக மகளிர் சதுரங்கப் போட்டியில் பாரதத்தைச் சேர்ந்த ரோஹிணிக்குச் சிறப்புப் பரிசு கிடைத்துள்ளது.

ரஷ்ய விமானம் நொறுங்கியது

(மாஸ்கோ)

சோவியத் விமானம் ஒன்று நொறுங்கி வீழ்ந்ததில் அதில் பிரயாணம் செய்த பயணிகளும், சிப்பந்திகளும் இறந்ததாக நேற்று அறிவிக்கப்பட்டது.

ஐவர் கொலை

(ஜொஹனஸ்பேக்)

தென்னாபிரிக்காவில் புதிதாக உருவான கலவரங்களில் ஐந்து கறுப்பர்கள் கொல்லப்பட்டதாக ஜொஹனஸ்பேக் தகவல்கள் நேற்றுத் தெரிவித்தன.

லண்டனில் பாரத விழா

லண்டனில் ஒரு மாதகால பாரதக் கலாசார விழா ஆரம்பமாகியுள்ளது. பிரிட்டிஷ் பிரதம மந்திரி திருமதி மார்க்கிரெட் தட்சர் பாரதத்தின் முன்முயற்சிகளை வெகுவாகப் பாராட்டியுள்ளார்.

வெளிநாட்டு பயணங்கள்

வெளிநாட்டுப் பிரயாண ஒழுங்குகளுக்கும், கடவுச்சீட்டுத் தொடர்பான சகல ஏற்பாடுகளுக்கும்

மல்ரி சேவிசஸ்

37 (351) மணிக்கூட்டு வீதி,

(வெலிங்டன் தியேட்டர் சந்தி)

யாழ்ப்பாணம்

தொலைபேசி: 22762

தொழிற் பயிற்சி

Computer Programming

BASIC - COBOL

★ ரெலிவிஷன், வீடியோ டெக்றிப்பியறிங்

★ எலக்ரிக்கல் வயறிங் & வெல்டிங்

★ Diploma in Hotel Management

FRENCH, GERMAN

சகல பயிற்சிகளும் கூடிய நேர செய்முறைப் பயிற்சியுடன் பயிற்சியளிக்கப்படும்.

நெல்லியடியில் ஆரம்பம்; 21-07-85

யாழ்ப்பாணத்தில் ஆரம்பம்: 21-07-85

விபரங்களுக்கு:

JAFFNA TECHNICAL INSTITUTE

தபால் கந்தோர் வீதி, (தபால் கந்தோர் அருகாமை) நெல்லியடி, கரவெட்டி.

ஸ்ரான்லி வீதி, (றெயில்வே கடவையருகாமை) யாழ்ப்பாணம்.

வேண்டுகோள்

25-5-85 அன்று க முருகேசு, ஆகிய என்னிடமிருந்த எனது இல்லத்தில் வைத்து கடத்தப்பட்ட மோட்டார் சைக்கிள் இல 86/9903/MD 90 ஹொண்டா வினை சம்பந்தப்பட்டவர்கள் மனிதாபிமான முறையில் தயவுசெய்து திருப்பித்தருமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

க. முருகேசு

203, முரசுமோட்டை

பரந்தன்

COMPUTER PROGRAMMING AND DATA PROCESSING COURSE

(BASIC LANGUAGE)

(11.th Batch)

Weekend Classes

by

Qualified and Experienced Panel of Lecturers.

Commencement — 21-07-85 at 11 a.m.

Fees: 1500/-

Ideal for those who seek employment abroad.

கன்ரேபியா கல்வி நிறுவனம்

21, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 24201

ஈழமுரசு

6000 அடி நீள ஒலிப்பதிவில் விமான விபத்து பற்றிய விபரம்

கடந்த மாதம் அத்திலாந்திக் சமுத்திரத்தில் விபத்துக்குள்ளான எயர் இந்திய விமானத்தின் பிளாக் பொக்ஸ் ஒலிப்பதிவு நாடாவின் ஆறாயிரம் அடி நீளமான பகுதியில் இந்த விபத்துப் பற்றிய முழு விபரங்கள் இருப்பதாக, விசாரணை நடத்தும் நீதிபதி கிர்பால் தெரிவித்துள்ளார். இந்த ஒலிப்பதிவு நாடாவின் விபரங்களையடுத்தே இந்த விபத்துப் பற்றிய முடிவை எடுக்கலாம் என்றும், அதுவரை திட்டவட்டமாக எதையும் சொல்ல முடியாது எனவும் அவர் மேலும் சொன்னார். விமானச் சிதைவுகள் பற்றி மேலும் தகவல்கள் அறியவேண்டி ஏற்படும் பட்சத்தில், கடற்படுக்கையினின்றும் அவற்றை மீட்டு எடுத்தற்கு விசேட நீதிமன்றம் ஆவன செய்ய முயலும் எனவும், பம்பாயில் வைத்துப் பத்திரிகையாளர்களிடம் நீதிபதி கிர்பால் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ஜெயவர்த்தனா கொலை முயற்சி:

ரஞ்சனின் சிநேகிதி, சகோதரர், மாமன் கைது!

விசாரணையில் பலர்

ஜனாதிபதி ஜெயவர்த்தனா கொலை முயற்சி சம்பந்தமாக ஜெலிக்நைட் கொண்டு சென்ற ஹைஏஸ் வானை சந்தேக நபர்கள் கொழும்பு பிரதம தபாற் கந்தோர், ஏயர் லங்கா காரியாலயம் ஆகியவற்றின் முன்பாக நிறுத்த இருந்ததாக பொலிஸ் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளதாக 'லங்கா புவத்' தெரிவிக்கிறது.

இதேவேளை சந்தேக நபர் ரஞ்சனின் சிநேகிதியும், அவரது சகோதரர், மாமன் ஆகியோரும் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் சம்பந்தமாக ஏற்கனவே முப்பத்தைந்துபேர் கைதாகி தீவிர விசாரணைக் குட்படுத்தப் பட்டுள்ளனர்.

தேடப்படும் ரஞ்சன்வசித்து வந்ததாகக் கூறப்படும் வெள்ளவத்தை பொஸ்வல் பிளேஸைச் சேர்ந்த ஒரு கணவனும் மனைவியும் இரகஸிய பொலிஸாரால் விசாரிக்கப்பட்டு வருகின்றனர். ஹல்ஸ்டர்ப்பிலுள்ள குறிப்பிட்ட ஒரு விடுதியைச் சேர்ந்தவர்களும் விசாரணை செய்யப்பட்டு வருகின்றனர்.

ரஞ்சனின் சிநேகிதி என்று கூறப்படுபவரை பொலிஸார் சப்புகஸ்கந்தை என்ற இடத்தில் வைத்துக் கைது செய்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது. அதேவேளையில் இதுவரை கைதானவர்கள் தொகை 38 ஆக அதிகரித்துள்ளதாக நேற்றிரவு அறிவிக்கப்பட்டது.

பாதிக்கப்பட்ட ஊழியர்கள் ஆண்டுக் கூட்டம் நாளை

பாதிக்கப்பட்ட ஊழியர்களின் ஆண்டுப் பொதுக்கூட்டம் நாளை சனிக்கிழமை, காலை யாழ்ப்பாணம் ஜும்மா பள்ளி வாசல் வீதியில் உள்ள இலங்கை மலாயன் சங்கக் கட்டடத்தில் நடைபெறவுள்ளது.

ஜூலை 83 இனக்கலவரத்தின் பின்னர் பாதிக்கப்பட்ட ஊழியர்களின் புனர் வாழ்வுத் திட்டம், வேலையிழந்த ஊழியர்களின் ஒய்வூதியத் திட்டம், உயிர் இழந்த ஊழியர்களின் நட்டஈடுத் திட்டம் ஆகியன பற்றிய நடவடிக்கைகள் பற்றி இக்கூட்டத்தில் அறிவிக்கப்படும்.

இக்கூட்டத்திற்கு யாழ். அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கம், யாழ். பிரஜைகள் குழு செயலாளர் திரு. ஆர். பாலசுப்பிரமணியம், அகதிகள் புனர்வாழ்வுக் கழகத் தலைவர் திரு. கா. விஸ்வலிங்கம் ஆகியோர் சிறப்புஉரை நிகழ்த்துவர்

பதில் அதிபர்....

-1ஆம் பக்கத் தொடர்

பத்தோராம் திகதியிலிருந்து அப்பதவியில் உறுதிப்படுத்த இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் உரிய நடவடிக்கைகளை கல்வி அமைச்சில் மேற்கொண்டுள்ளது.

பதில் அதிபர்களாக இருந்தவர்கள் அனைவரையும் கல்வி அமைச்சு நிரந்தரமாக்கமுடிவு செய்திருந்தும் பல தமிழர்கள் விசேடமாக மலையகப் பாடசாலைகளிலுள்ளவர்கள் நிரந்தரமாக்கப்படவில்லை. இவ்வாறு நிரந்தரமாக்கப்படாதவர்களை 21-04-82 இல் இருந்து நிரந்தரமாக்கக் கல்வி அமைச்சு உறுதியளித்துள்ளதாக சங்கச் செயலாளர் திரு. த. மகாசிவம் தெரிவித்தார்.

இவ்வாறு நிரந்தரமாக்கப்படாதவர்கள் அனைவரும் தமது முழுப் பெயர், 1980 ஏப்பிரல் 30ல் கடமையாற்றிய பாடசாலை, தற்போதைய பாடசாலை முகவரி போன்ற விபரங்களுடன் உடனடியாக இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத் தலைமை அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

நிரந்தர அதிபர்களாக இருந்தும் அவர்கள் கடமையாற்றிய பாடசாலை உயர்ந்த தர அதிபர் பதவிக்குரியதாக இருந்தால் அவர்களுக்கும் உயர்ந்த தர அதிபர் பதவி வழங்கவேண்டும் எனவும் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

கேரதீவு....

—1-ஆம் பக்கத் தொடர்

பார்க்கப்படுகிறது.

அந்த வீதியிலிருந்து கேரதீவுயெட்டி வரை சுமார் 600 அடி தொலைவுக்கு பாலம் ஒன்று அமைக்கப்படவுள்ளது. ஆனால் இப்பாலம் அமைப்பதற்கு இன்னமும் நிதி ஒதுக்கப்படவில்லை. இப்பால வேலைகள் பூர்த்தியடைந்த பின்னரே இப்பாதையில் வாகனங்கள் பாதசாரிகள் சிரமமின்றிப் பிரயாணம் செய்ய முடியும்.

நீலன் கிழக்குக்கும்....

—1-ஆம் பக்கத் தொடர்

தெரிவித்த எச்.டபிள்யூ. ஜெயவர்த்தனா கியூ ஸி, தெரிவித்தது பற்றியும் நேற்றுக் கருத்துக்கள் பரிமாறப்பட்டன.

கலாநிதி நீலன் திருச்செல்வம் கிழக்கிலங்கை கூட்டணிப் பிரமுகர்களையும், பி. என். சூசைதாசன் வடபகுதி கூட்டணிப் பிரமுகர்களையும் நேரில் சந்தித்து, பூட்டான் மாநாட்டு விபரங்களை விளக்குமாறு பணிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

யாழ்ப்பாண....

—1-ஆம் பக்கத் தொடர்

இந்த நிலை காரணத்தால் மின்சார சப்ளை துண்டிக்கப்படுமானால் யாழ். மாவட்டம் இருளில் மூழ்கும் அபாயம் உருவாகலாமெனவும் அஞ்சப்படுகின்றது.

150வது ஆண்டு விழாவில் யாழ். துணைவேந்தர் உரை:

நாவலரை சைவ உலகுக்கு அளித்த பெருமை யாழ். மத்திய கல்லூரியையே சாரும்!

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் 150 வது ஆண்டு நிறைவு விழாக் கொண்டாட்டங்கள் கல்லூரிக் கொடி ஏற்றி வைக்கப்பட்டதுடன் நேற்று ஆரம்பமாகியது.

யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன், யாழ். மத்திய கல்லூரியின் 150 ஆண்டு நிறைவு மலரான "யாழ் மத்தியத்தை" வெளியிட்டு வைத்துப் பேருரை நிகழ்த்துகையில், சைவத்திற்கும், தமிழிற்கும் பெருந் தொண்டாற்றிய நாவலரை சைவ உலகிற்கு அளித்த பெருமை யாழ். மத்திய கல்லூரியையே சாரும் என்றார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், சைவத்திற்கும் தமிழிற்கும் சிறந்த தொண்டாற்றிய இந்துபோட் இராசரெத்தினம் போன்ற பலர். யாழ். மத்திய கல்லூரியாலேயே உருவாக்கப்பட்டார்கள். 1934 ஆம் ஆண்டு முதல் யாழ்ப்பாணத்தில் சைவ வளர்ச்சியில் மத்திய கல்லூரிக்கு முக்கியத்துவம் உண்டு.

ஆங்கிலேயர் ஆதிக்கம் இருந்தபோதே இக்கல்லூரி ஆரம்பமான போதிலும் எல்லா வகுப்புகளிலும் தமிழ் கட்டாய பாடமாகக் கற்பிக்கப்பட்டது.

ஆரம்பத்தில் சென்னைப் பல்கலைக்கழகப் பரீட்சைக்கு யாழ்ப்பாணத்தவர்களைக் கற்பித்த ஒரே கல்லூரியாகவும் யாழ். மத்திய கல்லூரி விளங்கியது. பின்னர் 1922ல் லண்டன் பல்கலைக்கழக வகுப்புகளும் இங்கு தொடங்கப்பட்டது. இவ்வாறு கீழைத்தேய மேலைத்தேயப் பல்கலைக் கழகங்களோடு தொடர்பை வளர்த்த பெருமை இக்கல்லூரிக்கு உண்டு.

மகாத்மா காந்தி கூட இக்கல்லூரிக்கு விஜயம் செய்துள்ளார். இலங்கையில் தேசாதிபதிகளாக இருந்த பலரும் இக்கல்லூரிக்கு விஜயம் செய்து அதன் சேவைகளைப் பாராட்டிச் சென்றது குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாணத்தில் கிரிக்கெட், உதைபந்தாட்டம் ஆகியவற்றை அறிமுகம் செய்து வைத்த பெருமை மத்திய கல்லூரியையே சாரும். விளையாட்டுப் போட்டியில் 'ஜிம்கானா' வெற்றிக் கிண்ணத்தை 1898ல் மத்திய கல்லூரி முதன் முதலாகப் பெற்றது கல்வித் துறையோடு இணையாக விளையாட்டுத்துறையும் முக்கியமானது என்பதை நிரூபித்த பெருமை மத்திய கல்லூரிக்கே உரியது.

1942ம் ஆண்டு 52 மாணவர்களை பல்கலைக்கழகத்திற்கு அனுப்பி மத்திய கல்லூரி ஒரு சாதனையை நிலை நாட்டியது என்றும் கூறினார்.

கல்லூரி அதிபர் திரு. வே. பாலசுந்தரம் தலைமையில் நடைபெற்ற நேற்றைய விழாவின் ஆரம்பத்தில் மும் மத வழிபாடுகளும் இடம்பெற்றன.

யாழ். மத்தியம் முதற் பிரதியை வைத்தியக் கலாநிதி ஜெகாபசுபதி பெற்றார். முன்னாள் யாழ். இந்து அதிபர் திரு. என். சபாரத்தினம், பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர் திரு. என். இராஜதுரை ஆகியோரும் நேற்றைய கூட்டத்தில் உரையாற்றினார்கள்.

நெதர்லாந்து....

...1-ஆம் பக்கத் தொடர்

கப்' வாகனத்தைக் கடத்திச் சென்றுள்ளனர். அவ்வாகனத்திற்குள் தூதரக அதிகாரியின் உடைமைகளும், உடுப்புகளும் இருந்ததாகவும், இவரை விமான மூலம் கொழும்புக்கு அனுப்புவதற்கு அரசாங்க அதிபர் நடவடிக்கை எடுத்ததாகவும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்தித் திட்டவேலைகளுக்கு இவ்வாண்டு 13 கோடி ரூபாவையும், அடுத்த ஆண்டு 25 கோடி ரூபாவையும் செலவிட நெதர்லாந்து அரசு தீர்மானித்திருந்தது. இம்மாவட்ட அகதிகளுக்குப் புனர்வாழ்வளிக்கவும் அயர்லாந்து தூதரகம் இணங்கியிருந்தது. ஆனால் இவ்வாகனக் கடத்தல் சம்பவத்தால் இவ்வேலைகள் பாதிக்கப்படலாமென அஞ்சப்படுகிறது. இவைகளை மனதில் கொண்டு வாகனத்தையும், மற்றும் உடைமைகளையும் தன்னிடமோ, அல்லது வேறு பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளிடமோ ஒப்படைக்குமாறு அரசாங்க அதிபர் திரு. ஜெகா செந்தில்நாதன் விடுத்துள்ள வேண்டுகோளில் தெரிவித்துள்ளார்.

வேலைவாய்ப்பு...

-1ஆம் பக்கத் தொடர்

அமைச்சர் இந்தப் பணியகத்தினால் பல வெளிநாட்டு வேலைவாய்ப்புகள் இலங்கையருக்குக் கிடைக்கும் என்றார்.

புதுடில்லியில் காமராஜரின் பன்னிரண்டு அடி உயரச் சிலை

(புதுடில்லி)

ஏறத்தாழப் பத்தாண்டுகள் வரையில் தமிழ் நாட்டின் முதலமைச்சராகச் சேவையாற்றிய, அமரர் காமராஜரை நினைவு கூருமுகமாக, புதுடில்லியில் அன்னாரது பன்னிரண்டு அடி உயரச் சிலையைத் திரை நீக்கம் செய்து வைத்து இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி அவருக்குப் புகழாரம் சூட்டினார்.

கிருஷ்ணாமெனன் மார்க் என்னும் பெயர் கொண்ட வீதியில் நிறுவப்பெற்ற அச்சிலையின் சிற்பி, சென்னையைச் சேர்ந்த மணி நாகப்பா ஆவர். காமராஜ் ஞாபகார்த்த நம்பிக்கைச் சபையின் பிரயத்தனத்தின் பயனாகவே சிலை உருவாயிற்று.

ஒரு லட்சம் ரூபா பெறும் காசோலையை திருமதி மஞ்ஜு பாஷினியிடம் பிரதமர் ராஜீவ் கையளித்தார். சென்னையில் இப் பெண்மணியின் தலைமையின் கீழ் இயங்கிவரும் பால மந்தீர் அனாதை இல்லமும் குடும்பநல வைத்திய சாலையும் காமராஜராலேயே தாபிக்கப் பெற்றவை.

மிகத் தாழ்ந்த நிலையிலிருந்து நாட்டின் தலைமைப் பதவிக்கு ஏற்றமடைந்த காமராஜர் தேசத்தினதும், தேசமக்களினதும் நலனுக்காகத் தமது பதவியைக் கூடத் துறக்கத் தயாராக இருந்தார் எனப் பிரதமர் ராஜீவ் காந்தி அவரைப் பாராட்டினார்.

யாழ் தீயணைக்கும்....

...1-ஆம் பக்கத் தொடர்

இதற்கென மூன்று தமிழ் தீயணைப்பு அதிகாரிகள் கொழும்பிலிருந்து இடமாற்றம் செய்யப்படவிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

பாவற்குளம்....

—1-ஆம் பக்கத் தொடர்

தமிழ் மக்கள் தற்போது காடுகளில் ஒளிந்து உயிர் வாழ்கின்றனர். பாவற்குளம்பட்டினத்தில் ஒரு தமிழரையேனும் காண்பது இன்று அரிதாகிவிட்டது. அப்பிரதேசத்து சிங்களமக்களை பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லவைத்த பின்னர், ஆயுதம் தாங்கியவர்கள் குண்டுகளை வெடிக்கச் செய்தனர். தமிழ் மக்களின் மனதில் அச்சமூட்டுவதே அதன் நோக்கம் என, தமிழீழ விடுதலைப் புலிகள் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பால் விற்பனை நிலையம்

நல்லூர் தொகுதி அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் பால் விற்பனைக் கிளை ஒன்று இன்று பிற்பகல் 3-00 மணியளவில் யாழ்ப்பாணம் பெருமான் கோவிலுக்கு அண்மையில் திறந்து வைக்கப்படவுள்ளது.

துயர்துடைப்பு ...

—1-ஆம் பக்கத் தொடர்

கிழமை காலை 9 00 மணிக்கு மன்னார் நகரசபை மண்டபத்தில் பிரதான சமயங்களின் பிரமுகர்களால் சர்வமத பிரார்த்தனைகளுடன் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

"மன்னார் துயர்துடைப்பு மறுவாழ்வுச் சங்கம்" என்ற பெயரில் ஆரம்பமாகவுள்ள இச்சங்கம் மன்னார் பகுதிகளில் ஆபத்தான வேளைகளில் உதவி புரியும். இச்சங்கத்தில் தாமாக முன்வந்து சேர்ந்துகொள்ள விரும்புவோர் வரவேற்கப்படுகின்றனர்.

"ஈழமுரசு" சரவிபாபா அட்வர்டைசிங் அசோஸியேற் ஸ்தாபனத்தாரால் 37, கண்டி வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 19-7-85 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது. தொலைபேசி: 23336